**தலைப்பு 403 – மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு**

---

1.1. நிதிக் கூற்றுகள்

1.1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சின் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றைக் கொண்டமைந்த 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கியுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 11(1) பிரிவு பிரகாரம் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கிய சாராம்ச அறிக்கை 2021 யூன் மாதம் 30 ஆந் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தில் 11(2) பிரிவு பிரகாரம் அமைச்சிற்கு ஏற்புடையதான வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் 21 ஆந் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154 (6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆவது பிரிவு பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுகிறது.

இவ்வறிக்கையில் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, நிதிக் கூற்றுகளிலிருந்து 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில், மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இவ்வறிக்கையில் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.2 நிதிக் கூற்றுகள் தொடர்பாக பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுகளை தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றை தீர்மானித்தல் கணக்கு கொடுக்கும் அலுவலரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தில் 38 (1) (இ) உபபிரிவு பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்கான பயனுள்ள உள்ளக நிருவாக முறைமை தயாரித்து பராமரிக்கப்படுவதாக கணக்கு கொடுக்கும் அலுவலர் சான்றுப்படுத்த வேண்டுமென்பதுடன், குறித்த முறைமையின் பயன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்து அதன்படி முறைமையை பயனுள்ளதாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை முன்னெடுத்தல் வேண்டும்.

1.2 நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம்,

வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கு கொடுக்கும் அலுவலரை அறிவுறுத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்துடனான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6(1) (ஈ) பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை குறிப்பிடுகின்றேன்.

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு புதிய அமைச்சு ஆவதால் கடந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுகள் தொடர்பான அபிப்பிராயம்

### 1.6.1 நிதி செயலாற்றுகை கூற்று

**மீண்டுவருஞ் செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நிதி செயலாற்றுகை கூற்றின் படி மொத்த மீண்டுவருஞ் செலவினம் ரூபா.19,012,387,668 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், நிதிக் கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செலவின கூற்றின் படி அது ரூபா.18,938,014,708 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | கூட்டு மொத்தம் பெற்றுக்கொள்கையில் அச்சீட்டு வழு காரணமாக வேறுபட்டுள்ளது. | செவ்வையாக நிதிக் கூற்றுகளை தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.2 சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிசாராத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி ரூபா.346,766,528 ஆக காட்டப்பட்டிருந்ததுடன், திறைசேரி அச்சீடுகளின் படி அது ரூபா.558,107,895 ஆக காட்டப்பட்டிருந்தமை காரணமாக நிதிக் கூற்றுகளில் நிதியல்லாத சொத்துக்கள், சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ஒதுக்கத்தில் ரூபா.211,341,367 ஆன வேறுபாடு காணப்பட்டது. | எதிர்வருங் காலத்தில் CIGAS நிகழ்ச்சித் திட்டம் மூலம் உரியவாறு பொருத்தமான வகையில், செவ்வையான நிதியல்லாத சொத்துக்களின் மீதியை நிதிக் கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | செவ்வையாக கணக்கு மீதிகளை நிதிக் கூற்றுகளில் உள்ளடக்குதல் வேண்டும். |

## 1.6.3 முற்பணக் கணக்கின் மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட முற்பணக் கணக்கின் பிரகாரம், அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கில் கிடைக்கப்பெறுதல் மற்றும் கொடுப்பனவு ஒழுங்குமுறையில் ரூபா. 20,034,214 மற்றும் ரூபா. 24,222,031 ஆயினும், நிதி செயலாற்றுகை கூற்றில் குறித்த பெறுமதிகள் ஒழுங்குமுறையில் ரூபா. 24,222,031 மற்றும் ரூபா. 20,034,214 ஆக காண்பிக்கப்-பட்டிருந்தது. | ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் CIGAS கணினி தரவுகள் மற்றும் திறைசேரி பிரதிகளை ஒப்பிடப்பட்டதன் பின்னர் அமை-ச்சின் கட்டுப்பாட்டு கணக்கு தயாரிக்கப்படும். ஆகையால் முற்பணக் கணக்கில் பெறுமதி மற்றும் அமைச்சின் CIGAS கணக்கு படி கிடைக்கப்பெறல் பெறுமதி மாறுபடுகின்றது. | முற்பணம் கிடைக்-கப்பெறல் மற்றும் கொடுப்பனவு செவ்-வையாக குறிப்பிடல் வேண்டும். |

## 1.6.4 கட்டுநிதி மீதி

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ)** நிதி செயலாற்றுகை கூற்றின் படி திறைசேரி கட்டுநிதி ரூபா.988,762,787 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், நிதிக் கூற்-றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுநிதி கணக்கு படி திறைசேரியிடமிருந்து கட்-டுநிதி கிடைக்கப்பெறல் ரூபா.1,323,306,069 ஆகவும், காசுப் பாய்ச்சல் கூற்றில் அதனை ரூபா.1,001,193,283 ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சிகாஸ் குறிப்பு வைப்பில் வழு ஏற்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுகளில் செவ்வையாக கட்டு-நிதி பெறுமதிகளை உள்ளடக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | அனுப்பி வைக்கப்பட்ட போதும் திறைசேரி புத்தகங்களில் காணப்படாத 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் கட்டுநிதி மீதி ரூபா.23,575,842 ஆவதுடன், அது நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் கீழ் மற்றும் கட்டுநிதி மீதியின் கீழ் காண்பிக்கப்படவில்லை. | அவதானிப்பு சரியாகும். | நிதிக் கூற்றுகளில் செவ்வையாக கட்டு-நிதி பெறுமதிகளை உள்ளடக்குதல் வேண்டும். |
| **(இ)** | கட்டுநிதி சீராக்கல் கணக்கில் அமைச்சினால் 253 தலைப்பு பொருட்டு மேற்கொண்ட செலவினமாக ரூபா.4,964,680 ஐ பற்று வைக்க வேண்டுமாயினும், ரூபா.5,009,883 ஐ பற்று வைத்தல் காரணமாக கட்டுநிதி சீராக்கல் கணக்கு ரூபா .45,203 ஆல் அதிகமாக பற்று வைக்கப்பட்டிருந்தது | அவதானிப்பு சரியாகும். | கட்டுநிதி செவ்வை-யாக சீராக்குதல் வேண்டும். |
| **(ஈ)** | கட்டுநிதி சீராக்கல் கணக்கில் சமூக பாதுகாப்பு அமைச்சிடமிருந்து கிடைக்-கப்பெற்று, திறைசேரியிடம் தீர்க்கப்பட்ட ரூபா.12,430,496 ஐ பற்று வைத்தல் காரணமாக கட்டுநிதி சீராக்கல் கணக்கு ரூபா.12,430,496 ஆல் அதிகமாக பற்று வைக்கப்ப-ட்டிருந்தது. | அவதானிப்பு சரியாகும். | கட்டுநிதி செவ்வை-யாக சீராக்குதல் வேண்டும். |

### 1.6.5 ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பராமரிக்கப்படாமை

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன**

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **1978** ஆம் ஆண்டு திசெம்பர் 19 ஆந் திகதிய **842** ஆம் இலக்க திறைசெரி சுற்றறிக்கை மற்றும் நிதி ஒழுங்குவிதி **502(2)** பிரகாரம் நிலையான சொத்துக்களின் பதிவேடு இற்றைப்படுத்தப்படவில்லை. | கணினிமயப்படுத்தி பராமரிக்கப்படுதல். | சுற்றுநிருபங்கள் மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் பிரகாரம்-நிலையான சொத்துக்-களின் பதிவேடு பராமரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதி ஒழுங்குவிதி 891(1) பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடக்கிய பிணை பதிவேடு பராமரிக்கப்படவில்லை. | எதிர்வரும் காலங்களில் பிணை பதிவேடு பராமரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய அலுவலர்கள் தொடர்பான பிணை பதிவேடு பராமரித்தல் வேண்டும். |
| (இ) | நிதி ஒழுங்குவிதி 1647(உ) பிரகாரம் வாகனங்களை பட்டியலிடும் பதிவேடு பராமரிக்கப்படவில்லை. | தற்போது வாகனங்களை பட்டியலிடும் ஆவணம் பரா-மரிக்கப்படுவதுடன், நிதி ஒழு-ங்குவிதி படி ஆவணம் பராமரிப்பதற்கு 2021 ஆம் ஆண்டு தொடக்கம் நடவடி-க்கை மேற்கொள்ளப்படும். | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் வாகனங்-களை பட்டியலிடும் பதிவேடு பராமரிக்கப்-படுதல் வேண்டும். |
| (ஈ) | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவை பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் வருகை பதிவேடு பராமரிக்கப்படவில்லை. | எதிர்வரும் காலங்களில் பராமரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 2.11.1 பிரகாரம் குழுவின் செயலாளரால் வருகை பதிவேடு பராமரிக்க-ப்படுதல் வேண்டும். |
| (ஊ) | நிதி ஒழுங்குவிதி 341 இல் ஏற்பாடுகளின் பிரகாரம் அடி-இதழ்களின் ஆவணம் பராம-ரிக்கப்படவில்லை. | எதிர்வரும் காலங்களில் பராமரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதி ஒழுங்குவிதி 341 இல் ஏற்பாடுகளின் பிரகாரம் அடி இதழ்-களின் ஆவணம் பராமரிக்கப்படுதல் வேண்டும். |

**2.** **நிதிசார் மீளாய்வு**

**2.1** **செலவின முகாமைத்துவம்**

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம்** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) 18 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்திருந்த ரூபா. **50,630,000** ஆன மொத்த ஒதுக்கீடும் எஞ்சியிருந்ததுடன், 25 செலவு விடயங்களின் பொருட்டு ஏற்பாடு செய்திருந்த தேறிய ஒதுக்கீடுகளிலிருந்து 25% தொடக்கம் 99% வரை எஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பராமரிப்பு தேவைகள் ஏற்படாமை, கொரோனா தொற்று நோய் நிலைமை காணரமாக ஆகக் குறைந்த அலுவலர்களை சேவையில் ஈடுபடுத்தல், அலுவலகம் முடப்படுதல், கொள்வனவு தேவைகள் ஏற்படாமை என்பன காரணங்களாகியுள்ளன. | சரியாக மதிப்பீடுகளை தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) மூன்று செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக நி.ஒ.விதி 66 மூலம் மாற்றப்பட்ட ரூபா. .1,000,000 ஆன மொத்த ஒதுக்கீடு எஞ்சியிருந்தது. | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை, அனுப்பிய ஒதுக்கீடுகள் செலவு செய்யாது எஞ்சியிருத்தல். பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலாமை போன்ற விடயங்கள் காரணமாகியுள்ளன. | தேவைகளை சரியாக அடையாளம் காணப்பட்டு நி.ஒ.விதி 66 மூலம் ஒதுக்கீடுகளை மாற்றுதல் வேண்டும். |

## 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளுதல்

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | 48 செலவு விடய்களுக்கு ஏற்புடையதாக நிதிக் கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக் கூற்றில் பெறுமதி ரூபா.**203,427,211** ஆவதுடன், திறைசேரி பதிவு செய்த பொறுப்புகளின் பெறுமதி ரூபா.**458,968,760** ஆகியதால் அமைச்சுக்களின் புத்தகங்கள் மற்றும் திறைசேரி புத்தகங்கள் என்பவற்றுக்கிடையில் ரூபா.**255,541,549** ஆன வேறுபாடு காணப்பட்டது. | அரச கணக்கு பணிப்பாளர் நாயகத்திடம் உசாவி கடிதம் அனுப்புதல். | பொறுப்புகள் மற்றும் கடப்பா-டுகள் என்பவ-ற்றை சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்குகளில் குறிப்பிடல் வேண்டும் |
| **(ஆ)** | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையில் 2 (இ) பந்தி பிரகாரம் தொடங்கும் ஆண்டின் வரவு செலவு ஒதுக்கீடு தொடர்பாக கவனம் செலுத்தாது, மீளாய்விற்கான ஆண்-டில் 11 செலவு விடயங்களின் பொருட்டு ரூபா.978,578,500 ஆன பொறுப்புகளும் கடப்பாடுகளும் மேற்-கொள்ளப்பட்டிருந்தன. | கல்வி அமைச்சிக்கு உட்பட்டு இயங்கிய சிக்கலான விடய-வெல்லையொன்றை இவ்வமை-ச்சின் கீழ் கொண்டு வரப்பட்ட-மையால், அமைச்சு இந்த விடயவெல்லைகளில் அலுவ-ல்களை மேற்கொள்ளுதல் தொடர்பான அனுபவங்கள் இல்லாமை காரணமாக மேற்-பார்வை செய்வதற்கு முடியா-மை, எல்லா கடப்பாடுகளும் 2021 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்களில் பதிவாதல் காரண-மாக அமைச்சிற்கு நிருவகிக்க முடியாத நிலைமை ஏற்படுதல். | பொறுப்புகள் மற்றும் கடப்பா-டுகள் என்பவ-ற்றை சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்குகளில் குறிப்பிடல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 15 செலவு விடயங்களில் ரூபா.103,286,753 ஆன எஞ்சிய ஒதுக்கீடு-களை விஞ்சி ரூபா.92,581,599 ஆன பொறுப்புகளும் கடப்பாடுகளும் மேற்-கொள்ளப்பட்டிருந்தன. | கல்வி அமைச்சிக்கு உட்பட்டு இயங்கிய சிக்கலான விடய-வெல்லையொன்றை இவ்வமை-ச்சின் கீழ் கொண்டு வரப்பட்ட-மையால், அமைச்சு இந்த விடயவெல்லைகளில் அலுவ-ல்களை மேற்கொள்ளுதல் தொடர்பான அனுபவங்கள் இல்லாமை காரணமாக மேற்-பார்வை செய்வதற்கு முடியா-மை, எல்லா கடப்பாடுகளும் 2021 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்களில் பதிவாதல் காரண-மாக அமைச்சிற்கு நிருவகிக்க முடியாத நிலைமை ஏற்படுதல். தல். | பொறுப்புகள் மற்றும் கடப்பா-டுகள் என்பவ-ற்றை சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்குகளில் குறிப்பிடல் வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கு கொடு-க்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர்** | **ஒழுங்கமையாமை** | | |
| 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிரு-க்கவில்லை. | தயாரிப்பு தொடர்-பான நடவடிக்-கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகி ன்றன | சுற்றுநிருபங்க ளின் ஏற்பாடு-களின் பிர-காரம் நடவடி-க்கை மேற்-கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2018(1) ஆம் இலக்க சுற்ற-றிக்கையால் திருத்-தம் செய்யப்பட்ட 2018 பெப்ருவரி 06 ஆந் திகதிய 05/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | பிரஜயங்கள்/சேவை பெறு-நர்கள் பட்டயம் பிரகாரம் நிறுவனத்தால் பிரஜயங்-கள்/சேவை பெறுநர்கள் பட்-டயம் தயாரிக்கப்படவில்லை | தயாரிப்பு தொடர்-பான நடவடிக்-கைகள் தற்போது மேற்கொள்ளப்படு-கின்றன | சுற்றுநிருபங்க ளின் ஏற்பாடு-களின் பிர-காரம் நடவடி-க்கை மேற்-கொள்ளுதல் வேண்டும். |

**3. தொழில்பாட்டு மீளாய்வு**

-----------------------------

**3.1 நொக்கு மற்றும் செயற்பணி**

----------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு<br>-------------------------------- | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம்<br>------------------------------ | பரிந்துரை<br>------------ |
|---|---|---|
| தேசிய முன்னுரிமைகள் மற்றும் தேவைகள் பொருட்டு சர்வதேச தரங்-களையும், கவனத்தில் கொண்டு சிறுவர்கள் மற்றும் பெண்களை பொருளாதாரம், சமூக மற்றும் கல்வி ஆகிய துறைகளில் வலுவூட்டுவதற்கு தேவையான சட்டத்துடனான, நிறுவனத்-துடனான, மனிதவளச் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்ட-ங்களை நடைமுறைப்படுத்தல், என்பன அமைச்சின் செயற்பணியாயினும், சிறுவர் மற்றும் பெண்கள் உரிமைகளை உறுதிப்படுத்தல், பாதுகாத்தல், மேம்ப-டுத்தல் என்பவற்றுக்கு வகுக்கப்பட்ட சட்டங்களையும் கொள்கைகளையும் நடைமுறைப்படுத்தப்பவில்லை. | சிறுவர்களை கல்வி ரீதியாக வலுவூட்டுவதற்கு தேவையான வசதிகளை அளித்தல் தொடர்பில் கவனம் செலுத்துகையில், தேசிய சிறுவர் அதிகார சபையால் கட்டாய கல்வி மீறல் தொடர்பாக அதிகார சபையிடம் பதிவாகிய முறைப்பாடுகள் தொடர்பில் தே-வையான தலையீடுகளை மேற்-கொள்ளப்பட்டுள்ளது. | செயற்பணிக்கு அமைவாக நடை-முறைப்படுவதற்கு கொள்கைகளை வலுவூட்டப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.2 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ருவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆவது பந்தி பிரகாரம் மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக இற்றைப்படுத்திய நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பணியாற்றொகுதி மற்றும் தற்போதுள்ள பணியாற்றொகுதி தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்படும் வகையில் செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் பணியாற்றொகுதி 2021 ஆம் ஆண்டில் செயற்றிட்டத்தில் உள்ளடக்கபபட்டிருத்தல், அமைச்சின் விடயவெல்லை மற்றும் அலுவல்கள் வேறுபட்டதால் 2021 ஆம் ஆண்டின் அமைப்புக் கட்டமைப்பு ஆண்டு ஆரம்பத்தில் தயாரிக்கப்படவில்லை. | சுற்றுநிருபங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.3 பணிகளை நிறைவேற்றப்படாமை

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| **(அ)** பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் அலகுகளை நிருமாணித்தல் மற்றும் உபகரணங்களை வழங்குதல், மதிய நேர காப்பகங்கள் மற்றும் சமூகத்தின் மூத்த குடிகளுக்கான சமூக நிலையங்கள் என்பன வலுவூட்டுல், தேசிய முன்பள்ளி பாடவிதானங்களின் வலையமைப்பினை அபிவிருத்தி செய்தலும் நடைமுறைப்படுத்தலும் மற்றும் கரையோர பிரதேசங்களின் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் சுரண்டலை தவிர்ப்பதற்கான தகவல் கல்வி தொடர்பாடல் பொருட்களை திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக்காக மீளாய்விற்கான ஆண்டில் ரூபா.7,820,000 ஆன ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்திருந்ததுடன், அந்தப் பணிகளை நிறைவேற்றப்படவில்லை. | கள அலுவலர்கள் மூலம் கரையோர பிரதேசங்களில் உதவி தேவைப்படும் பிள்ளைகளை அடையாளம் காணப்பட்டதன் பின்னர் உதவி பெற்றுக்கொள்வதற்கு முடியுமான நிறுவனங்களிடம் ஆனப்பி வைத்தல் மற்றும் நிதி உதவி வழங்க முடியுமான வளமூலங்களை ஒழுங்கிணைத்து வழங்குதல். | செயற்றிட்டம் படி கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுதல் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் பெறுகை திட்டம் மூலம் உயர்தர ஆசிரியர்கள் மற்றும் மாணவர் மாணவிகளின் பொருட்டு டெப் கணினி 195,148 ஐ இலவசமாக வழங்குவதற்கு உரிய திட்டமிடலின்றி ரூபா.மில்லியன் 5,000 ஆன ஒதுக்கீடுகளை மேற்கொண்டு தேசிய போட்டியுடன் கூடிய விலை கணக்கு கோரப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் குறைப்பாடுகள் மற்றும் விலை மனு மதிப்பீடுகளின் குறைப்பாடுகள் காரணமாக இந்த பெறுகைகள் தாமதமடைந்திருந்ததுடன், ஆரம்ப கட்டத்தின் கீழ் டெப் பணினி 96,919 ஐ பாடசாலைகளிடம் வழங்கு-வதற்காக ரூபா.மில்லியன் 3,008 ஆன தொகைக்கு 2019 ஆம் அண்டு செப்தெம்பர் 30 ஆந் திகதியில் உடன்படிக்கை மேற்கொண்டிருப்பினும், 2021 செப்தெம்பர் மாதமாகும் போதும் டெப் பணினி கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | திட்டமிடப்பட்ட பணிகள் உரிய காலப்பகுதிக்குள் வினைத்திற-னுடன் நிறைவேற்றப்படுதல் வேண்டும். |
| (இ) | 16 விளையாட்டு துறை பாட-சாலைகளை மேம்படுத்துவதற்காக மீளாய்விற்கான ஆண்டில் ரூபா.78,400,000 ஐ ஒதுக்கீடுகளாக ஏற்பாடு செய்திருந்ததுடன், மொத்த ஒதுக்கீடுகளையும் பயன்படுத்தி 11 பாடசாலைகளின் பணிகளை மட்டும் முடிவுறுத்தப்பட்டிருந்தது. | வேலைகளின் முதன்மை மற்றும் மதிப்பீட்டு பெறுமதி பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகளை தீர்மா-னித்தல் மற்றும் வருடாந்தம் கிடைக்கப்பெறுகின்ற ஒதுக்-கீடுகள் மூலம் எஞ்சியுள்ள பாடசாலைகளினதும் வேலை-களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | மதிப்பீடுகளை செவ்வையாக தயாரித்து கடமைப் பொறுப்புகளை திட்டமிடல் வேண்டும். |

## 3.4 பெறுகைகள்

----------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சினால் ரூபா.3,500,000 ம் செலவிடப்பட்டு மகளிர் தொழில்முயற்சிகளுக்கான டிஜிரல் சந்தைப்படுத்தல் மேடைதளம் ( Digital Marketing Platform) உருவாக்கும் பெறுகை செயற்பாட்டின்போது, பெறுகை வழிகாட்டல் கோவையில் 6.2.2, 6.3.1 (ஈ) மற்றும் 6.3.6 பந்தி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. அதேபோன்று இந்தக் கருத்திட்டம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுறுத்தப்படுதல் வேண்டுமாயினும், 2021 ஏப்ரல் 27 ஆந் திகதியிலும் நடைமுறைப்படுத்த முடியுமான வகையில் முடிவுறுத்தப்படவில்லை. | எதிர்வரும் பெறுகை நடவடிக்கைகளின் போது பெறுகை வழிகாட்டல் கோவை பிரகாரம் விலை மனு ஆவணங்களுக்கு மேலதிகமாக, பிரதிகளுடன் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட விண்ணப்பத்தாரிகளை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் படி ஆலோசனை வழங்குதல் வேண்டும். | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், திட்டமிடப்பட்ட பணிகளை உரிய காலப் பகுதிக்குள் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

---------------------------

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | 2001 ஆண்டில் ரூபா.மில்லியன் 25 ஐ செலவிடப்பட்டு பியகம மகளிர் விடுதி நிருமாணிக்கப்பட்டிருப்பினும், 2020 ஆகஸ்ட் மாதம் 27 கணக்காய்வு திகதியிலும், அந்தக் காணி முறையான வகையில் கையகப்படுத்தியிருக்கவில்லை. | கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுதல் | கையகப்படுத்தும் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும். |
| **(ஆ)** | அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற வேறு அமைச்சுகளுக்குரிய 05 வாகனங்களை கையகப்படுத்துவதற்கு முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை. | கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுதல் | கையகப்படுத்தும் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.6 வெளிநாட்டு கருத்திட்டங்களின் செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அமைச்சினால் நடைமுறைப்படுத்துகின்ற 1938 மகளிர் தொலைபேசி சேவை வலுப்படுத்துவதற்கான தகவல் தொழில்நுட்ப முறைமை அபிவிருத்தி செய்வதற்காக சார்க் நிதியத்தின் அளிப்புகள் மூலம் நடைமுறைப்படுகின்ற கருத்திட்டத்தின் கீழ் மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 5,077,552 ஐ செலவிடப்பட்டு 15 கணினிகளை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஆயினும், மென்பொருள் முறைமை அபிவிருத்தி செய்யப்படாமை காரணமாக இந்தக் கணினி கணக்காய்வு திகதியான 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆந் திகதியிலும் பயன்படுத்தப்படவில்லை. | ஏற்பட்ட சிரமங்கள் மற்றும் சுகாதார பாதுகாப்பு முறைமைகள் காரணமாக அலுவலர்களை மட்டப்படுத்தப்பட்டதால் இந்த முறைமை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்துவதற்கு இயலவில்லை. | வெளிநாட்டு கருத்திட்டங்கள் மூலம் நடைமுறைப்படுத்துகின்ற கடமைகளை திட்டமிடப்பட்டவாறு நடைமுறைப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) உலக வங்கி கடன் நிதியத்தின் கீழ் நடைமுறைப்படுகின்ற ஆரம்ப சிறுவர் அபிவிருத்தி கருத்திட்ட நிதியத்தில், மீளாய்விற்கான ஆண்டில் 1400 வெப்பமாணிகளை கொள்வனவு செய்வதற்காக உலக வங்கியின் அனுமதி கிடைக்கப்பெற்றிருந்தது. அவசர தேவை காரணமாக நேரடி பெறுகையின் கீழ் பெறுகைகளை மேற்கொண்டு ஒரு அலகு ரூபா.16,400 படி 4,500 வெப்பமானிகளை ரூபா.73,800,000 ஐ செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. நாடு முழுவதும் முன்பள்ளிகள் மூடப்பட்டிருந்த பின்ன-ணியில் அவசர பெறுகையின் கீழ் பெறுகை மேற்கொள்ளப்பட்டிருப்பினும், பொருட்கள் கிடைக்கப்பெறுவதில் தாமதம், பொருட்கள் விநியோகிப்பதில் தாமதம் காணப்பட்டது. மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் போட்டியுடன் கூடிய விலை கணக்குகளின் மீது மேலும் 7,000 ம் வெப்பமாணிகளை நேரடி பெறுகை | போட்டியுடன் கூடிய விலை கணக்கு காரணமாக பெறுகை மேற்கொண்டமையால் விலை கணக்கு குறைவடைதல். | கடன் நன்கொடையின் கீழ் நடைமுறைப்படுகின்ற கருத்திட்டங்களின் நிதியங்களை ஆகக் கூடிய வினைத்திறனுடனும், விளைவுத்திறனுடனும், பொருளாதார ரீதியாக ஆகக் கூடிய நன்மை பயக்கும் வகையிலும் செலவினங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். |

மேற்கொண்ட நிறுவனத்திடமிருந்தே ஒரு அலகு ரூபா.6,250 படி கொள்வனவு செய்தமையால் கருத்திட்டத்திற்கு ரூபா.45,675,000 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 3.7 முகாமைத்துவ குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| காலி ரிச்மண்ட் கல்லூரி வளாகத்தில் நிருமாணிக்கப்பட்டுள்ள தொல்பொருளியல் நினைவுச் சின்னமாக கவனத்தில் கொள்கின்ற மிக விசேடமான கட்டிடக்கலை பெறுமதியுள்ள கட்டிடமொன்று 2016 ஆம் ஆண்டில் பழுதுபார்ப்பதற்காக ரூபா.5,461,979 ஐ செலவிடப்பட்டிருந்தது. தொற்பொருளியல் நினைவுச் சின்னமாக கவனத்தில் கொள்கின்ற இக் கட்டிடத்தின் பழுதுபார்த்தல்களை மேற்கொள்ள வேண்டிய முறை தொடர்பாக தொற்பொருளியல் திணைக்களத்தை அறிவுறுத்தப்பட்டிருப்பினும், இந்தக் கட்டிடம் அழிந்து செல்லும் நிலையில் உள்ளமை அவதானிக்கப்பட்டது. | தென் மாகாணத்தில் பொறியியலாளர் திணைக்களத்தை தொடர்புக் கொண்டு இந்தப் பணி முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தொல்பொருள் நினைவுச் சின்னமாக கருதப்படும் மிக விசேடமான கட்டிடக் கலை பெறுமதியுள்ள கட்டிடமாவதால் பழுதுபார்த்தல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். |